**தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்**

**முன்னிலை :- திருமதி.Dr.R.லதா M.A., M.L., Ph.D.,**
**தலைமை நீதித்துறை நடுவர், திருவாரூர்.**

**2026ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 24ஆம் நாள் வெள்ளிக்கிழமை**
**திருவள்ளுவராண்டு 2057, ஸ்ரீ பராபவ வருடம், சித்திரை 10 ஆம் நாள்**

**Crl.M.P.No.485/2025**

**in**

**M.C.No.07/2024**

1) திருமதி.தனலெட்சுமி, வயது.33
க/பெ.சுரேஷ்,
மாரியம்மன் கோவில் தெரு,
சேங்காலிபுரம்,
குடவாசல் தாலுக்கா,
திருவாரூர் மாவட்டம்.

2) இளவர்.நந்தினி, வயது.13,
த/பெ.சுரேஷ்,
மாரியம்மன் கோவில் தெரு,
சேங்காலிபுரம்,
குடவாசல் தாலுக்கா,
திருவாரூர் மாவட்டம்.

3) இளவர்.கார்த்திகேயன், வயது.08,
த/பெ.சுரேஷ்,
மாரியம்மன் கோவில் தெரு,
சேங்காலிபுரம்,
குடவாசல் தாலுக்கா,
திருவாரூர் மாவட்டம். .... **மனுதாரர்கள்**

***(2, 3மைனர் இளவருக்காக***
***அவரது இயற்கை பாதுகாவலரும்,***
***தாயாருமான திருமதி.தனலெட்சுமி மூலமாக)***

LATHA Digitally signed by LATHA Date: 2026.04.24 16:32:37 +0530

**/எதிர்/**

சுரேஷ், வயது.44,
த/பெ.கோதண்டராமன்,
மாரியம்மன் கோவில் தெரு,
பத்தாளை,
38நெடுஞ்சேரி வருவாய் கிராமம்,
திருவிடைச்சேரி,
குடவாசல் தாலுக்கா,
திருவாரூர் மாவட்டம். . . . **எதிர்மனுதாரர்**

இவ்வழக்கு 18.04.2026ம் தேதியன்று இறுதி விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டு, மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு S.மாரிமுத்து ஆகியோர் ஆஜராகியும், எதிர்மனுதாரர்களுக்கு அழைப்பாணை சார்வு செய்யப்பட்டும் எதிர்மனுதாரர் ஆஜரில்லாததால் தோன்றாதரப்பினராக அறிவிக்கப்பட்டும், மனுதாரர் தரப்பு வாதம் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் இன்று (24.04.2026) இந்நீதிமன்றம் வழங்கும்

**உத்தரவு**

மனுதாரர்கள் தரப்பில் கு.வி.மு.ச.பிரிவு 128 (147 BNSS) ன் படி 1 முதல் மனுதாரர்களுக்கு எதிர்மனுதாரர் வழங்கவேண்டிய ஜீவனாம்ச நிலுவைத்தொகை 17 மாத காலத்திற்கு ரூ.3,06,000/–த்தை உடனடியாக செலுத்தவும், தவறும்பட்சத்தில் எதிர்மனுதாரரின் பெயரில் உள்ள சொத்தினை பற்றுகை செய்து ஏலம் விட்டு மனுதொகையினை வசூல் செய்து இவ்வழக்கில் வைப்பீடு செய்ய உத்தரவிடவேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

LATHA Digitally signed by LATHA
Date: 2026.04.24
16:32:46 +0530

1) <u>மனு உரை சுருக்கம்</u>

மனுதாரர்கள் எதிர்மனுதாரரிடமிருந்து ஜீவனாம்சம் கோரி M.C.07/2024மனு தாக்கல் செய்துள்ளார். அம்மனுவானது இந்நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டு மனுதாக்கல் செய்யப்பட்ட 19.01.2024 முதல் 1 முதல் 3 மனுதாரர்களுக்கு எதிர்மனுதாரர் மாதந்தோறும் ரூ.18,000/-த்தை ஒவ்வொரு மாதம் 5ஆம் தேதிக்குள் வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

அதன்படி, எதிர்மனுதாரர் மனுதாரர்களுக்கு 19.01.2024 முதல் 30.05.2025 வரை 17 மாத காலத்திற்கு ரூ.3,06,000/-வழங்க வேண்டுமென வழக்கறிஞர் அறிவிப்பானது எதிர்மனுதாரரின் வீட்டு முகவரிக்கு அனுப்பப்பட்டபோது Address left without instruction என குறிப்பிட்டு திருப்பப்பட்டுள்ளது.

அதன்பின்னர், மேற்படி அறிவிப்பை எதிர்மனுதாரரின் நிரந்தர முகவரிக்கு அனுப்பியபோது எதிர்மனுதாரர் வேண்டுமென்றே அறிவிப்பை பெற மறுத்தும், இதுநாள் வரை நிலுவைத்தொகையினை தராமலும் உள்ளார். எதிர்மனுதாரருக்கு சொந்தமாக ரூ.5 இலட்சத்திற்கு மேல் மதிப்புள்ள நன்செய் நிலம் உள்ளது. எதிர்மனுதாரர் பெயரில் உள்ள மேற்கண்ட சொத்தின் செட்டில்மென்ட் ஆவண எண்.40/2020 ஆக குடவாசல் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் மனுதாரர்களுக்கு வாழ்க்கை பொருளுதவி செலுத்த போதிய வசதி, வாய்ப்பு இருந்தும் கடந்த 4 வருடங்களுக்கு மேலாக மனுதாரர்களுக்கு பொருளுதவி தொகையை வழங்காமல் இருந்து வருகிறார்.

LATHA Digitally signed by LATHA
Date: 2026.04.24 16:32:53 +0530

ஆகவே, மனுதாரர்களுக்கு எதிர்மனுதாரர் வழங்கவேண்டிய வாழ்க்கை பொருளுதவி நிலுவை தொகையை மனுதாக்கல் செய்யப்பட்ட 19.01.2024 முதல் 30.05.2025 வரை 17 மாத காலத்திற்கு ரூ.3,06,000/- உடனடியாக எதிர்மனுதாரர் செலுத்திவைக்கவேண்டுமென்றும், தவறும்பட்சத்தில் எதிர்மனுதாரர் பெயரில் உள்ள சொத்தினை ஜப்தி செய்து ஏலம் விட்டு இவ்வழக்கில் வைப்பீடு செய்ய உத்தரவிடவேண்டி இந்த மனுவுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**2)** எதிர்மனுதாரரை நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரில்லாததால் தோன்றாதரப்பினராக அறிவிக்கப்பட்டுள்ளார்.

**3)** **இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சினை யாதெனில் –**

இம்மனு அனுமதிக்கத்தக்கதா?

**4)** மனுதாரர் தரப்பு வாதம் கேட்கப்பட்டது. வழக்கின் சாட்சியங்கள் மற்றும் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

**5)** 1ம் மனுதாரர் ம.சா.1ஆக விசாரிக்கப்பட்டு, ம.த.சா.ஆ.1 முதல் ம.த.சா.ஆ.4 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**6)** 1 முதல் 3 மனுதாரர்கள் தாக்கல் செய்த M.C.No.07/2024 வழக்கில் 24.01.2025அன்று எதிர்மனுதாரர் மனுதாரர்களுக்கு ஜீவனாம்சமாக மாதந்தோறும் ரூ.18,000/-ம் வழங்க வேண்டுமென உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பது ம.சா.ஆ.1 ஆவணத்தின் மூலம் நிரூபணமாகிறது.

LATHA Digitally signed by LATHA
Date: 2026.04.24 16:32:59 +0530

இந்த நீதிமன்ற உத்தரவின்படி ஜீவனாம்ச தொகையை எதிர்மனுதாரர் இதுநாள்வரை வழங்காமல் இருந்து வருவதால் மேற்படி ஜீவனாம்ச தொகையை கேட்டு மனுதாரர்கள் தரப்பில் 30.05.2025 ம் தேதி பதிவு அஞ்சலில் அறிவிப்பு கொடுக்கப்பட்டுள்ளது என்பது ம.சா.ஆ.2ன் மூலம் தெரியவருகிறது.

அந்த அறிவிப்பானது எதிர்மனுதாரராரால் பெற்றுக்கொள்ளாமல் Address left without Instruction என குறிப்பிட்டு திருப்பப்பட்டுள்ளது என்பது ம.சா.ஆ.3 ஆவணத்தின் மூலம் தெரியவருகிறது. இம்மனுவானது இந்நீதிமன்றத்தால் கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிர்மனுதாரருக்கு அனுப்பப்பட்ட அழைப்பாணையும், Addressee cannot be located என்ற காரணம் குறிப்பிட்டு திருப்பப்பட்டுள்ளது. அதன்பேரில் எதிர்மனுதாரருக்கு எதிராக செய்தித்தாளில் விளம்பரம் செய்ய இந்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்பேரில், செய்தித்தாள் மூலம் அறிவிப்பு கொடுக்கப்பட்டும், எதிர்மனுதாரர் முன்னிலையாகாததால் தோன்றாதரப்பினராக அறிவிக்கப்பட்டுள்ளார்.

மேலும், கோப்புகளை பரிசீலனை செய்கையில், அசல் மனுவான எம்.சி.எண்.07/2024இல் எதிர்மனுதாரர் வழக்கறிஞர் மூலம் முன்னிலையாகி எதிருரை தாக்கல் செய்து எதிர்மனுதாரருக்கு எதிராக உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அந்த மனுவில் குறிப்பிட்டுள்ள முகவரியும், இம்மனுவில் குறிப்பிட்டுள்ள முகவரியும் ஒரே முகவரியாகும்.

மேலும், பரிசீலனை செய்கையில், எதிர்மனுதாரர் 1ம் மனுதாரரின் கணவர் என்ற முறையிலும், 2, 3 மனுதாரர்களின் தகப்பனார் என்ற முறையிலும் அவர்களுடைய அன்றாட பராமரிப்பிற்கு

LATHA Digitally signed by LATHA Date: 2026.04.24 16:33:06 +0530

பொறுப்புடையவர் ஆவார். இந்நிலையில், ம.சா.ஆ.4இல் 20.01.2020ம் தேதி எதிர்மனுதாரரின் தந்தையான V.கோதண்டராமன் எதிர்மனுதாரருக்கு ஏற்பாட்டு ஆவணமாக அவருக்கு சொந்தமான குடவாசல் சார்பதிவகத்தில் 1 புத்தகம் 535 தொகுதி 203 மற்றும் 204 பக்கங்களில் 1988ம் ஆண்டு 220 எண்ணாக கிரயம் பெற்ற சொத்து புல எண்.110/2011ல் 0.3.00 ஏர் எதிர்மனுதாரரான சுரேஷுக்கு தானமாக எழுதிக்கொடுத்துள்ளார் என்பது தெரியவருகிறது.

மேற்படி மனுதாரரின் சாட்சியத்தை கருத்தில் கொண்டும், மனுதாரர்களின் வாழ்வாதாரத்தை கருத்தில்கொண்டும், 1முதல் 3 மனுதாரர்கள் வாழ்க்கை பொருளுதவி தொகையை அடையும்பொருட்டு மனுவில் கோரியுள்ளவாறு மேற்படி சொத்துகளை பற்றுகை செய்ய உத்தரவிடுவதே சரியானது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

8) முடிவாக, இந்த மனு செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்பட்டு M.C.No.07/2024 வழக்கில் 24.01.2025தேதியிட்ட உத்தரவின்படி எதிர்மனுதாரர், மனுதாக்கல் செய்த 19.01.202024 முதல் 30.05.2025 வரையான நிலுவை தொகை ரூ.3,06,000/-த்தை 1 முதல் 3 மனுதாரர்கள் அடையும்பொருட்டு ம.சா.ஆ.4இல் குறிப்பிட்டுள்ள சொத்தினை பற்றுகை செய்ய உத்தரவிடப்படுகிறது.

படி செலுத்த: 3 நாட்கள்

பற்றுகை செய்ய : 25.05.2026

LATHA Digitally signed by LATHA Date: 2026.04.24 16:33:13 +0530

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னால் என்னால் படித்துப் பார்க்கப்பட்டு பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24ஆம் நாளில் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

LATHA Digitally signed by LATHA Date: 2026.04.24 16:33:19 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,
திருவாரூர்.

I. **<u>மனுதாரர் தரப்புச் சாட்சி –</u>**

ம.த.சா.1 –– திருமதி.சீதா

II. **<u>மனுதாரர் தரப்புச் சான்றாவணங்கள் –</u>**

**ம.த.சா.ஆ.1** – 18.03.2025 தேதியிட்ட உத்தரவு நகல்

**ம.த.சா.ஆ.2** – பட்டா ஜெராக்ஸ் நகல்

III. **<u>எதிர்மனுதாரர் தரப்புச் சாட்சிகள் – –</u>** இல்லை

IV. **<u>எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் –</u>** இல்லை

LATHA Digitally signed by LATHA Date: 2026.04.24 16:33:24 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,
திருவாரூர்.